3rd November 1966]

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (அ) Yes.

(இ) The Madras State Co-operative Bank has been advised to defer the proposal of constructing a new building for the duration of the National Emergency.

*375 **கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு பாங்கு அலுவலகத்திற் காகவும், மத்திய கூட்டுறவு பண்டகசாலையின் உபயோகத்திற் காகவும் கட்டடமும் "யாஸ்மின் ரைஸ் மில்லும்" வாங்க அரசாங் கத்தின் அனுமதி கோரப்பட்டதா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : புதுக்கோட்டை கூட்டுறவு மத்திய பாங்கு ஒரு கட்டடம் வாங்க கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடம் அனுமதி கோரியது. இந்த அனுமதி வழங்கப்பட்டது. புதுக்கோட்டை மத்தியக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஓர் அரிசி மில் வாங்கிய பிறகு, மாநில அரசின் உதவி வேண்டி மனுச் செய்தது. இச் சங்கம் இந்த மில் வாங்குவ தற்கு முன் அனுமதியைப் பெறவில்லையாதலால் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் இம் மனுவை நிராகரித்துவிட்டார்.

திரு. பி. முருகையன் : இந்த இரண்டு கட்டடங்களும் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இந்தக் கட்டடம் கட்ட 25—6—1963-ல் பெர்மிஷன் கொடுத்திருக்கிறார்கள் ரெஜிஸ்டிரார் அவர்கள். இந்தக் கட்டடம் கட்டுவதற்காகத்தான் பெர்மிஷன். அந்த மில் கட்டுவதற்கு பெர்மிஷன் கேட்கவில்லை.

திரு. சா. கணேசன் : இந்த ரைஸ்மில் விலைக்கு வாங்கியது அது கட்டியது அல்ல என்று தெரிகிறது ; அப்படித்தானா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : வாங்குவ தற்குத்தான் பெர்மிஷன்.

திரு. பி. முருகையன் : நான் கேட்ட கேள்வி, இரண்டு கட்டடங்களும் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டன என்பது. அதற்கு பதில் சொல்லவில்லை. தொகை எவ்வளவு?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : ரூ. 1,17,000 என்று அவர்கள் கேட்டார்கள். ரூ. 1,04,000-க்குத்தான் வாங்கியிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : வாங்கப்பட்ட கட்டடத்தின் மதிப்பு ரூ. 1,04,000 என்று சொன்னார்கள். இதற்கு யார் பொறுப்பு? யாரால் இவ்வளவு ரூபாய்க்கு வாங்கவேண்டுமென்ற ஸஜெஷன் கொடுக்கப்பட்டது? அதன் பேரில் பரிசீலனை செய்யப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.